**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for : | Prosecution : | **P.W.10** |
| | Defence : | **D.W.** |
| | Court : | **C.W.** |

| **Name :** | கமல் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். மார்கெட்டில் காய்கறி வியாபாரம் மற்றும் லோடுமேனாக இருக்கிறேன். வழக்கில் இறந்துபோன வீரமணிகண்டனை எனக்கு தெரியும். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு அவர் இறந்துவிட்டார். அவரை கொலை செய்ததாக சொன்னார்கள். அன்று இரவு சுமார் 08.30, 09.00 மணியளவில் நான் வீட்டில் தூங்கிகொண்டிருந்தேன். அப்போது எல்லோரும் சத்தம்போட்டு எழுந்து ஓடினார்கள். ஏதோ சண்டை என்று சொன்னார்கள். BC Hostel அருகே வந்து பார்த்தபோது வீரமணிகண்டன் இறந்துகிடந்தார். எப்படி இறந்தார் என்று நான் கேட்டதற்கு வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

07.06.2020ம் தேதி சுமார் 08.20 மணிக்கு நான், துரைராஜ் மகன் ராமர் ஆகியோர் சேர்ந்து ஆலம்பாடி ரோட்டில் உள்ள சமத்துவபுரம் ஆர்ச் அருகே பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது TN46 Y 4988 என்ற மோட்டார்சைக்கிளில் ஆஜர் 4வது எதிரி மற்ற 3 எதிரிகளை அதில் ஏற்றிக்கொண்டு சென்றதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. வழக்கு எதிரிகளை எனக்கு தெரியும். 09.30 மணியளவில் வீரமணிகண்டன் கழுத்து அறுபட்டு இறந்துகிடந்ததாக கேள்விபட்டு நான் அங்கு போய் பார்த்ததாக போலிசார் விசாரைணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. வீரமணிகண்டனை எதிரிகள் டால்டாகண்ணன், ஆனந்த், பார்த்தா (எ) பார்த்திபன் ஆகியோர்கள் வெட்டிவிட்டார்கள் என்று மறுநாள் கேள்விபட்டேன். வீரமணிகண்டன் டிஸ்பிளை போன செல்போனை கொடுத்தது சம்மந்தாக அவருக்கும் எதிரிகளுக்கும் சண்டை ஏற்பட்டது என்று கேள்விபட்டதாக போலிசார் விசாரைணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் மற்றும் நண்பர்கள் என்பதால் தற்போது அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்னிடம் எதிரிகள் தான் வீரமணிகண்டனை வெட்டிவிட்டார்கள் என்று எதிரிகளுக்கு பிடிக்காதவர்கள் தவறாக சொன்னார்கள் என்றால் சரியல்ல.

**<u>4வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சம்பவம் நடந்த காலம் கொரானா காலம் என்றால் சரிதான். அப்போது ஊரடங்கு அமலில் இருந்தது. அப்போது மார்கெட் தினமும் சுமார் 2 1/2 மணிநேரம் திறந்துவைப்பதற்கு தான் அனுமதித்திருந்தார்கள். அந்த காலகட்டத்தில் சுமார் ஒரு ஆண்டுகாலம் மதுபானம் விற்பனையில் இல்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.